# முத்தமிழ் நேசன்

பிப்ரவரி 2022 மலர்:1 இதழ்:1 இனிக்கும் இலக்கிய இதழ்



அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக் கழக
வேந்தர்–பெருந்தமிழர்

தாழை இரா.உதயநேசன் இல்ல

மணவிழா சிறப்பிதழ்


மானுடம் போற்றும்
மாண்புறு கலைஞர்!
உழைப்பில் இவரோ
இருபதின் இளைஞர்!

## தலையங்கம்

உலகமெங்கும் வாழும் தமிழ்ப் பெருமக்களுக்கு,

பேரன்பான வணக்கம்.

முத்தமிழ்நேசன் இதழ்உங்களுக்காக, உங்கள் ரசனைக்குத் தீனிபோடும் வகையில், உங்கள் நிமிடங்களுக்கு நறுமணம் தடவும் ஆர்வத்துடன் மலர்ந்து வருகிறது.

நம் 'தமிழே விதையாய்' உலகமெங்கும் பரவவேண்டும் என்று, பாடுபட்டுவரும் உலகப்பெருந் தமிழரும், அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக் கழக நிறுவனரும் வேந்தருமான தாழை இரா.உதயநேசன் அவர்களின், தமிழ்ப்பணிகளின் தொடர்ச்சியாய் இந்த 'முத்தமிழ்நேசன்' உங்கள் உளம் ஆள வருகிறது.

முகம் தெரியாத தமிழ்ப் படைப்பாளர்களுக்கும், முகவரி தருவதே முத்தமிழ்நேசனின் முதல் நோக்கம்.

படைப்பாளர்கள் பெருகப் பெருக, தமிழின் புகழும் பெருமையும் பெருகும்.

இது முன்னோட்ட இதழாக- வெள்ளோட்ட இதழாக- உங்கள் விழிகளின் வீதிக்கு வருகிறது.

உங்களின் அன்பான பேராதரவை எதிர்நோக்குகிறோம்.

உங்கள் கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

மனிதம் மலரட்டும்...

அன்புடன்,

*த.அமுதா*

(ஆசிரியர்)


# முத்தமிழ் நேசன்

**இனிக்கும் இலக்கிய இதழ்**

பெப்ரவரி **2021** மலர்:1 இதழ்:1

**நிறுவனர்:**

**தாழை.இரா.உதயநேசன்**

**ஆசிரியர்:**

த.அமுதா

**ஆசிரியர் குழு:**

முனைவர்

ஜோ.சம்பத்குமார்

கவிஞர் செ.வீரமணி

த.ஓவியா

**வடிவமைப்பு:**

ம.சேவியர்

(கைத்தடி பதிப்பகம்)

**அச்சு:**

MS OFFSET (ராயப்பேட்டை)



**அலுவலக முகவரி:**

முத்தமிழ்நேசன்

எண் 10-முதல்தெரு, ஸ்ரீராமபுரம்,

ஆம்பூர்- 635 802

திருப்பத்தூர் மாவட்டம்.

# மணமக்கள்...



கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம்
(நிறுவுநர்
உலகத்தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம்
தன்முனைக் கவிதைகள் குழுமம்)



# மா மனிதர் உதயநேசனார் இல்ல மண விழா!

முத்தமிழின் புகழ் பரப்பும் அன்பர் அமெரிக்கா முத்தமிழ் பல்கலைக்கழகத்தின் வேந்தர் தமிழ்த்திரு கவிமாமணி தாழை இரா உதயநேசன் – திருமதி கலையரசி உதயநேசன் தம்பதியரின் குமாரன் திருநிறைச்செல்வன்

உ.சாம் ஜெபராஜ் – செல்வி இ.பிரேமலதா இவர்களின் திருமணம் ஆம்பூர் மாநகரில் சிறப்பாக நடைபெறுகிறது.

மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்.

அமெரிக்கா முத்தமிழ் பேரவை தொடங்கி அதன் கிளைகளாக அமெரிக்கா சிறுவர் பேரவை, அமெரிக்கா நூல் ஆய்வுப் பேரவை என பல குழுமங்கள் தொடங்கி தமிழ்த் தொண்டாற்றி வரும் கவிமாமணி தாழை இரா.உதயநேசன் அவர்கள் அமெரிக்கா முத்தமிழ் பல்கலைக்கழகம் ஒன்றையும் தொடங்கியிருப்பது அற்புதம்.


இவரது தமிழ்ச்சேவை பலராலும் பாராட்டு பெறுகிறது. இணைய வழியில் கருத்தரங்கம், பட்டிமன்றம், பேச்சரங்கம், பாட்டரங்கம், நடன அரங்கம் என பல்வேறு தமிழ் நிகழ்வுகளை சிறப்பாக நடத்தி வருகிறார். தமிழ் ஆளுமைகளின் உரைகளை அவ்வப்போது இணைய வழி நேரலையாக ஒளிபரப்பி தமிழ் நெஞ்சங்களின் அன்பைப் பெற்றுள்ளார். தமிழ் அமெரிக்கா தொலைக்காட்சியில் முதன்மை நிர்வாகியாக பணியாற்றி தமிழ் ஆளுமைகளிடம் நேர்காணல் கண்டுள்ளார்.

வாழ்ந்த காலங்களும், வாழும் காலமும் இனி வாழப்போகும் காலங்களும் பிறருக்கு நாம் என்ன செய்தோம்,செய்கிறோம் , என்ன செய்யப்போகிறோம் ? என்ற உணர்வுகளோடு நம் நகர்வு இருக்க வேண்டும். இப்படி வாழ்நாளை அர்த்தமுள்ளதாக்கி செயல்பட்டுக் கொண்டிருக்கும் இனியவர் தமிழ்மாமணி உதயநேசன் ஐயா அவர்கள்.

இவரது எதிர்கால நோக்கங்கள், தமிழுக்காக இவரது தொண்டுள்ளம் ஆகியவற்றை கேட்கும் போது நமக்கு பிரமிப்பாக இருக்கின்றன.

அமெரிக்காவிலிருந்து தமிழகம் வந்து அவரது மண்ணில் தனது மகனின் திருமணத்தை கிருத்துவ தேவாலயத்தில் நடத்துவது நமக்கெல்லாம் மகிழ்வைத் தருகிறது. உற்றார் உறவினர், நண்பர்கள் என புடைசூழ நடைபெறும் இத் திருமண விழாவில் நான் காண்பது அளப்பரிய மனிதநேயமும் விசாரிப்புகளும். தமிழ்மாமணி தாழை இரா உதயநேசன் இல்லத்திருமண விழா சிறந்தோங்கவும் மணமக்கள் இனிதே பல்லாண்டு வாழவும் வாழ்த்துகிறேன். தமிழ்ச் சுற்றங்களும் வாழ்த்துகின்றன.

## அனைவரும் புகழ வாழ்க!



அமுதபாரதி

பெரியவர், நண்பர், மற்றும்
பற்றுள உறவோர் என்னும்
அரியவர் கூடி வாழ்த்தும்
அருள்மகன் என்னத் தக்க
சாம்ஜெப ராஜ் தனக்கும்
சீர்ப்ரே மலதா வுக்கும்
திருவருள் ஆசி மேவும்
திருமணம்! வாழ்த்து கின்றோம்!

இருவரும் வருங்கா லத்தில்
இருவகைக் குழந்தை பெற்றுப்
பெரும் பெரும் வளங்கள் பெற்றுப்
பார்ப்பவர் வியக்கும் வண்ணம்
அரும்புகழ் வாய்க்கப் பெற்று
அனைவர்க்கும் உதவி செய்யும்
கருணையும் நிரம்பப் பெற்று
கனிவுடன் வொழ்க நன்றே!

# வாழிய மணமக்கள்!

## சாம் ஜெபராஜ் - பிரேமலதா


உதயநேசன் கலையரசி அன்பின் மைந்தன்
உயர்புகழின் சாம்ஜெபராஜ் மணநாள் காண
இதயமதை இணைத்திட்ட இனிய பெண்ணாள்
இன்முகத்தாள் பிரேமலதா மகிழ்வாய் ஏற்றே
இதமுடனே இருமனமும் ஒன்றாய்க் கூட
இன்சுற்றம் நட்புக்கள் மனத்தால் வாழ்த்த
புதுவாழ்வில் அடியெடுத்து வைக்கும் வேளை
பூக்கட்டும் புதுவசந்தம் பொன்னாய் மின்னி!

பெற்றோரின் நற்புகழைப் பெரிதும் போற்றிப்
பெற்றிடுவீர் நீவிணையர் பெருமைப் பேற்றை!
கற்றோரும் உற்றோரும் கனிவாய் வாழ்த்த
கண்டுணர்வீர் உம்திறனைப் புவியும் போற்ற!
சற்றேதும் சளையாமல் துறையில் நின்று
சாதனைகள் காண்பீரே கைகோர்த் தென்றும்!
நற்பேறும் பிள்ளைகளும் நலமாய்ப் பெற்று
நானிலமும் போற்றிடவே சான்றாய் வாழ்வீர்!

ஆல்போலே தழைத்திங்கு வாழ்க வாழ்க
அருகுபோலே வேரூன்றி மரபைக் காத்து!
சால்புடனே நல்லறமாய் இல்ல றத்தை
சலியாத மனங்கொண்டு செம்மை செய்வீர்!
தோள்சேர்ந்து படைத்திடுவீர் புகழை என்றும்
துணையாக இணையாக இடரை வென்றே!
ஆழ்மனத்தின் அன்புடனே வாழ்த்து கின்றோம்!
அகமகிழ்வாய்ப் பல்லாண்டு வாழ்க நீவிர்!

**வாழ்த்துகிறோம் அன்போடு!**

**முனைவர்.ஓசூர் மணிமேகலை**



# தமிழ் காதலியின் முந்தானை தழுவலில் வாழ்த்துகிறேன் ..



மெல்லிய,மென்மையான,மேனியை தழுவும் தென்றல்,சொல்லியச் சொக்க கவிதையில்,சொந்தம் பெறும்,சந்தன கவிதைகளே...முன் நின்று முல்லைத் தமிழ் வாழ்த்த,பின் நின்று ரசிக்கும் மனநிலையில் நான் ...

காதல் கனவுகளின் புரிதல்,காட்சிகளின் தெரிதல்,கண்களின் மொழிதல், இன்று நீவீர் கரம் பிடித்தாலும்,காயா உடம்பில் உரு இணைந்தாலும் நன்விரிப்பது காதல்தான்.கனவுகளை நனவாக்கி,காட்சிகளில் கரு இன்பம் கொண்டாடி,கால கண்களில் நல்லற மொழிந்து வாழ்வதின் அஸ்திபாரம் காதல் தான்

இலக்கியம், இதிகாசம் ,இதுகாறும் எழுதப்பட்ட புனைவுகள்,இவை அனைத்தும் நல்லறத்திற்கு காதல் என்று கவி தருகின்றன .காதலை அன்பு என்று கூட சொல்லாமே...

நீங்கள் இப்படிதான் வாழவேண்டும் என்று எல்லோர் போல ஒப்பிக்க என்மனம் விருப்பம் கொள்ளவில்லை.காதலோடு வாழுங்கள் என்றுதான் சொல்ல மனம் விளைகிறது .காதலில்தான் நீங்கள் தேடும் இல்லறத்தின் அணைத்து அத்தியாயங்களும் புதைந்து கிடக்கின்றன. புரிந்தவன் புத்திசாலி

என்னருமை உறவுகளே,தமிழின் தரவுகளே,நீங்கள் புகழ் பா எழுதி சிறக்க, இன்ப பூ பறித்து மகிழ ,வாழ்த்துகிறேன் . இன்று தொடங்கிய பந்தம் தொடர்கதை சந்தம் எழுத, தமிழ் காதலியின் முந்தானை தழுவலில் வாழ்த்துகிறேன் ..

ஆலம் விழுதுகள்
அனிச்சையாய் கூடி
அன்பு நளினங்களுக்கு
ஆரத்தி எடுக்கும்
ஆனந்த நாள்.

என்ன செய்து ,எதை கூறி
உங்கள் மனம் கவர,என
எண்ணிய வெளியில்
தமிழ் இங்கு
இன்னிசை கூறுகிறது
நீவீர் கரு பொருளாய்

பிரம்மனின் கணினி
தவம் இருந்து
தவத்தை பிறப்பிக்கும்
அத் தவம் நீங்கள்

உங்களிடம்
காதல்
ஜனனம் காண்கிறாள்
இல்லறம்
கவிதை பூணுகிறாள் .

வாழ்க்கை என்பது
தத்துவத்தின் திருவிளக்கு
நடைமுறையில் காணும்
நீவீர் பொன்விளக்கு

இலக்கு நிர்ணயித்து
இலக்கை அடையம்
நீங்கள் திசைகாட்டி அல்ல
இன்பத்தின் திசை

வால் நட்சத்திரம்
தோன்றி சொல்ல வேண்டிய
நற்செய்தியை
இந்த வால் சொல்லுகிறது
வாழிய நீவீர் ..

தேன் குழைத்த
தென் பூமியின் ராசாத்தி -
வான் வியந்த
கன்னியாகுமரியின்
கலங்கரை பாட்டு இது ..
அகம் குளிர ,
அன்பு விதைக்கும்
ஆனந்த பேழைகள்
அகம் ஆனந்தமாக
மகிழ்வு சுமக்கவும்
வல்லின பாட்டின் மொழிகளே

நீவீர் கீதை
எம்மில் கலந்த
அன்பு வேதம்
நுண்செல்களும்
உங்கள் பெயரில்
பாட்டு எழுதும்
வாழிய,எம்
பிருந்தா வனங்களே......

**மு.ஞா.செ. இன்பா**
**கைத்தடி பதிப்பகம்**

# இன்ப நதி பெருகட்டும்!

அமுதா தமிழ்நாடன்



எங்கள் அன்பிற்குரிய
மணமக்களே!

ஆல் போல் தழைத்தோங்கி
வானளவு புகழோங்கி
சிறக்கட்டும் உங்களிருவரின்
பெருவாழ்வு...

நேர்த்தியான சாலையில்
நேர்மறை எண்ணங்களின்
கை பிடித்து நடைபயின்று
சிகரங்களில் உச்சியில்
உங்கள் கொடியை ஏற்றுங்கள்!

சீர்பெறட்டும்
தங்களிருவரின்
இல்வாழ்வு...

நேர்வரட்டும்
உங்கள் முன்
வசந்தங்கள்!

கற்கண்டின் இனிப்பாய்
காதல் வாழ்வு சுவைக்கட்டும்!
கனித்தமிழின் சுவையாய்
இல்லறம் இனிக்கட்டும்!

வானம் புன்னகைத்துப்
பூத்தாவ...
கடலலை ஆர்பரித்துக்
கை தட்ட
இயற்கையின் இதயம் அமர்ந்த
வாழ்த்துகளோடு

சாம் உதயராஜ் – பிரேமலதா
இருவரின் இல்லற வாழ்வும்
சொக்க வைக்கும் வண்ணம்
சுடரட்டும்.

இந்நாள்
இன்பநதியாய் எட்டுத்திக்கும்
இனிதாய்ப் பாய்ந்தோடி
உங்கள் வாழ்வின் பெரும்பரப்பை
நனையாய் நனைக்கட்டும்;
எல்லாம் இதமாய் இருக்கட்டும்!
வாழ்த்துக்கள் கோடி கோடி!

# மல்லிகை அரும்பின் இசைக்குறிப்புகள்!

காதல் தேவதையே!
உன்
இதய வயலினை
இனிதாக மீட்டு!

மௌனம் பொத்திய
ரோஜா மொக்குகளே!
மெல்லிசை  பாடியபடியே
உங்கள் மெல்லிதழ் விரியுங்கள்!

அதிகாலைப் பறவைகளே!
உங்கள் இசைக் குறிப்புகளை
எங்கள் இதயத் தாளில்
மல்லிகை அரும்புகள் கொண்டு
குறித்துவிட்டுச் சிறகடியுங்கள்!

ஆசையைப் பெருகவிடும்
ஆதி அலைகளே!
உங்கள் கடலின்
ஆழுங்கள் கொண்டும்
அகலங்கள் கொண்டும்
புதுச் சொற்கள் நெய்து
பூபாளம் பாடுங்கள்!

இருளுடன் கிசு கிசுக்கும்
விளக்குகளே!
உங்கள் அழகு மொழியில்
அந்தாதி எழுதி
அரங்கேற்றுங்கள்!

ரம்பை–ஊர்வசி
திலோத்தமைகளே!
உங்கள்
ஆலிங்கனக் கவிதைகளை
அரற்றுங்கள்!

இதோ எங்கள்
மன்மதன்
சாமு ஜெபராஜையும்



அவர் இதயம் பற்றும்
பிரேமலதாவையும்
உங்கள் பாணியில்
உருகி வாழ்த்துங்கள்!

இவர்கள்
அமெரிக்க மண்ணில்
நடமாடும்
தமிழ்நாட்டு
தவ விளக்குகள்!

பெருந்தமிழர் உதயரின்
உயரங்களில் சஞ்சரிக்கும்
உன்னத  நட்சத்திரங்கள்!

அவர்களின்
வழிகள் தோறும்  நின்றபடி
சந்தனம் பூசக் காத்திருக்கின்றன
வசந்த காலங்கள்!

மலரிலே நெய்த பாதை
மணமுடன் காத்திருக்க...
உலகிலே அரிய தான
ஓரிசை கொஞ்சிப் பேச...
நிலவிலே பிறந்தார்ப் போல
நேரிலே தோன்று கின்ற...
சிலைகளே நீடு வாழ்க!
செந்தமிழ் போலே வாழ்க!

# அள்ள அள்ளக் குறையாத அமுதமாய்

ஆர்பரிக்கும் அலைகடலும்,
ஆழ்கடலில் ஓய்வதுண்டு.

ஆகாய வீதியின்
அழகிய வெண்ணிலவும்,
மாதத்தில் ஒரு முறை ஓய்வதுண்டு,

ஆனால் என்றும்
ஓய்வறியாப் பெருந்தமிழர்.

ஆம்பூரில் உதயமாகி
நேசத்தை நாடுகடத்தியது போல்
சென்ற இடத்தில் தன்
பாசத்தைப் பல்கிப் பெருக்கிய
தமிழ்த்தாயின் தவப்புதல்வராம்
தமிழ்மாமணி,
அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக் கழக வேந்தர்,
அமெரிக்க முத்தமிழ்
இலக்கியக் குழுக்களின் தலைவர்,
தாழை உதயநேசன் –கலையரசி தம்பதிகளின்
நேசத்தில் உதயமான
சாம் உதயராஜ் – பிரேமலதாவுடன்
திருமண பந்தத்தில் உயிர் பிணைகின்றார்.

இரு மனம் இணைந்து
ஒரு மனமான திருமணக்குயில்கள்

இல்லறமெனும் இன்பத் தேனமுதை
அள்ளிப் பருகட்டும்!

அன்பெனும் அட்சயத்தில்
அள்ளக் குறையாத அமுதமாய் ,
ஆண்டாண்டு காலங்கள் இன்பத்தமிழ்
வாழ்வு பெற்று,
பொற்றாமரையாய் என்றென்றும் முகம் மலர்ந்து,
புகழினில் இமயத்தை விஞ்சி
பண்புசால் பெரியோரின் மனம் வென்று
வெற்றித் தம்பதிகளாய் இவர்கள் வலம் வருவர்.
எனவே அவர்களை இதயத்தின்
உதடுகளால் அன்போடு வாழ்த்துகிறேன்!

கீழடியில் புதையுண்ட தமிழனின்
பழம் பெருமைகளைக்
கடல் கடந்து பரப்பி வரும்,
கலைமகளின் மறு உருவே!
கர்த்தரின் அருளாலே,
நின் புதல்வர்
நிகரற்ற செல்வமும், புகழும் பெற்று,
நீடுழி வாழ்கவென்று
வாழ்த்துதிங்கே தமிழ் இதயங்கள்.



*எழுத்தாளர் சாம்பவி சங்கர்*

# பார்ப்பவர் கண்களும் வாழ்த்தட்டும்!

**கவிஞர் திருமதி.ஷக்தி**



வண்ணமழை தூவட்டும்
வானமுகில் தோட்டம்
வாழ்ந்திருக்க ஊறட்டும்
ஆழ்ந்த துளிர் நேசம்

ஒற்றுமையாய் எண்ணமும்
உடன்பட்டே திண்ணமும்
கோர்த்திட்டக் கரங்களில்
குவிக்கட்டும் பாசம்

இன்னுயிர் ஒன்றாய்
இல்வாழ்வும் நன்றாய்
சிறக்கத்தான் சிறகுகளில்
விரியட்டும் பண்பு

அணைத்திட உள்ளமும்
அதன்பொருட்டே வெள்ளமும்
இறுக்கமாய் உள்ளங்களில்
பாயட்டும் மாண்பு

புரிந்திட்ட பார்வையில்
விரிந்திட்ட மாலைகளாய்
நேசத்தின் நூல் தொடுத்தே
சூடட்டும் மணவாழ்வு...

“அன்பும் அறனும்
உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது”

குறளாய் சிறந்து – ஒருங்கே
குரலாய் வாழ
பார் போற்ற வாழ்வு துவங்கட்டும்
பார்ப்பவர் கண்களும் வாழ்த்தட்டும்...
மணமக்கள் நீடூழி வாழிய வாழியவே!!...

# நான் இந்து இல்லை

உரக்கச் சொல்கிறேன்
நான் உள்கடந்தவள்
நான் வெளி கடந்தவள்

மனசைச் சுடுகாடு ஆக்காதே
என்கிறான் சிவன்
மனசைக் குருஷேத்ரம் ஆக்காதே
என்கிறான் கிருஷ்ணன்
சிவன் சுடலைவெப்பம்
அகங்காரம் அழிக்கச் சொன்னது
சூலாயுதம்

எளியோரைக் காக்கச் சொன்னது
ருத்ர தாண்டவம்
அநீதியைப் பொசுக்கச் சொன்னது
யாகக் குண்டம்
வெறுப்பை எரிக்கச் சொன்னது
கங்கை நீர்
அன்பைப் பெருக்கச் சொன்னது
புலித்தோல்
மாயை களையச் சொன்னது
ஜடாமுடி

தொப்புள்கொடி உணரச் சொன்னது
இன்றைக்குச் சொல்கிறீர்கள்
அல்லாவையும் குல்லாவையும்
கொண்டாடினால் குற்றம்

குழந்தை ஏசுவை
மண்டியிட்டால் குற்றம்
பிறரை நேசித்தால்
தேசத்துரோகம்
பிறரை அன்பு செய்தால்
இந்திய விரோதி
என்கிறீர்கள்

கிருஷ்ணனும் சிவனும்
என்னிடம்
அப்படிச் சொல்லவில்லை

ஒருவேளை அப்படிச் சொன்னால்
நான் சொல்வேன்
நீ தெய்வமும் இல்லை
நான் இந்துவும் இல்லை
மனிதமே என் மதம் !



– ஆண்டாள் பிரியதர்ஷினி



# எதிர்பாராத பரிசு

தாழை இரா.உதயநேசன்

ஆனந்தன் ஆனந்தமில்லாமல் காணப்பட்டான்.

அவன் மனது மிகவும் குழம்பிப்போயிருந்தது.

ஆனந்தன் ஒரு தனியார் கம்பெனியில் நிர்வாகியாக வேலை செய்துகொண்டிருக்கிறான்.

குணவதியை திருமணம் முடித்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டது. நான்காம் ஆண்டிற்காக, தன்னுடைய கிராமத்திலிருக்கும் குலதெய்வம் கோவிலுக்குச் செல்ல, எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்திருந்தான்.

அப்பொழுதான், அவனுடைய அம்மா, அத்தை ரூபத்தில் பிரச்சினை எழுந்தது. இரண்டு நாட்களாக இதேப் பேச்சுக்கள்:

“ஆமான்டா....ஆனந்தா... நாங்க ஒரு முடிவு பண்ணிட்டோம். நீ ரெண்டாவது கல்யாணம் செஞ்சியே ஆகனும். இந்த வீட்டிற்கு ஒரு வாரிசு வேணும்..” என்று கண்ணீர் சிந்தினார் அம்மா பத்மாவதி.

அதற்கு ஒற்று ஊதுவதுப்போல் வீசினாள். அத்தையும் வார்த்தைகளை.

“மூணு வருசமாச்சு... வயித்துல ஒரு புழு பூச்சிக்கூட இன்னும் குணவதி வயித்துல. ஒரு புழுப் பூச்சி கூட இல்ல. எங்க அண்ணன் வீட்டுக்கு வாரிசு இல்லாம இருக்குறது எவ்வளவு கஷ்டம்... உன் பொண்டாட்டி குழந்தைப் பெத்துக்கத் தகுதியில்லாதவனு.... ஊருல இருக்குறவனெல்லாம் சாட மாடையாப் பேசுறானுங்க...” மூச்சுவிடாமல் பேசினாள் ஆனந்தனின் அத்தை.

“பக்கத்து ஊர்ல... பார்க்க லட்சணமா... அழகா இருக்குற ஒரு பொண்ணுப்படத்த தரகர் கொடுத்திருக்காரு... நீ ஒருமுறைப் பாத்துட்டாப் போதும். மத்ததெல்லாம் நாங்கப் பேசிக்குவோம். உன் பொண்டாட்டிக்கிட்ட சம்மதமுன்னு ஒரு கையெழுத்து மட்டும் வாங்கிடு பெரிய பட்டிமன்றமே நடந்தது. இரண்டாவது

திருமணத்தில் தனக்கு விருப்பமில்லையென ஆனந்தன் பலமுறை சொல்லியும்.அனுதினமும் இந்தக் கூப்பாடு தொடர்ந்தது. குணவதி மனமுடைந்துப் போனாள். ஆனந்தனின் அம்மாவும், அத்தையும் ஓயாமல் அவளை சாடையாகத் திட்டிக்கொண்டிருந்தார்கள்.அன்று அவர்களுக்கு நான்காவது திருமண நாள். குலதெய்வம் கோவிலுக்குச் சென்று சாமி கும்பிட்டார்கள். குணவதியோ அமைதியாகவே இருந்தாள். ஆனந்தனிடம் அதிகம் பேசவில்லை.

கோயிலின் வளாகத்திலிருந்தப் புல்தரையில் அமர்ந்து, தன்னுடைய மனைவியைப் பார்த்து,“குணவதி... நான் உசுரோட இருக்குறவரைக்கும் நீதான் எனக்கு மனைவி... அடுத்தப்பிறவியிலும் உன்கூடத்தான் வாழ ஆசை. நீ எதுக்கும் கவலைப்படாத... அம்மாவும் அத்தையும் சொல்ற எதுவும் நடக்கபோறதில்ல.. அன்னை தெரசா சிசு பவனுல பேசி வச்சிருக்கேன்... நாம ஒரு குழந்தையைத் தத்தெடுத்துக்கலாம்... இங்கப் பாரு... நம்மள வரச்சொல்லி கடிதம் அனுப்பியிருக்காங்க...” என்றுக்கூறி தன் மனைவியையே கண் சிமிட்டாமல் பார்த்தான் ஆனந்தன்.

தலைக்கவிழ்ந்திருந்த குணவதியின் காதுகளில், கணவன் பேசிய வார்த்தைகள் தேன்மழை பொழிந்ததுப்போல இதமாக இருந்தது. தன்னுடைய நான்காவது திருமண நாளில், தனக்கு வெகுமதியாகக் கிடைத்த ஆனந்தனின் வார்த்தைகளால் பூரித்துப்போனாள் குணவதி..!

# நேசத்துடன் உதயமாகிறது அமெரிக்கா முத்தமிழ்ப் பல்கலைக் கழகம்

உலகத் தமிழர்களை மகிழ்விக்கும் செய்தி இது.

எங்கெங்கும் வாழும் தமிழர்களின் மத்தியில் திறமையாளர்களைக் கண்டெடுக்க சர்வதேசத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று '6643 லோகஸ்ட் குரோவ் டிரைவ், இண்டியானா பொலீஸ், இண்டியானா, அமெரிக்கா' என்ற முகவரியில் உருவாகியிருக்கிறது.

இப்பல்கலைக்கழகம் பல்வேறு சிரமங்களுக்கிடையில் 'தமிழரின் உயர்வே நம் வாழ்வு!' என்கிற நோக்கத்துடன் வாழும் தமிழ்மாமணி டாக்டர் தாழை இரா. உதயநேசன் அவர்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது இப்பல்கலைக்கழகம்.

தமிழ் வளர்ச்சிப் பணிகளை முதன்மைப்படுத்தி உலகத் தமிழ் மாணவர்கள் மற்றும் படைப்பாளர்களின் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு பன்னாட்டு, தேசியக் கருத்தரங்கம், தமிழ் அமர்வுகள், இலக்கண, இலக்கிய வகுப்புகள், படைப்பிலக்கியப் பயிற்சி வகுப்புகள், பயிற்சி பட்டறை வகுப்புகள், பட்டயப்படிப்புகள், தமிழ் இருக்கைகள் ஆகியவற்றை நடத்த திட்டமிட்டுள்ளனர். அதோடு, தமிழின் சிறந்த படைப்பாளர்களைத் துறைவாரியாகத் தேர்வு செய்து, ஆண்டுத்தோறும் மதிப்புறு முனைவர் பட்டங்களையும் இப்பல்கலைக் கழகம் வழங்கிச் சிறப்பிக்க இருக்கிறது. இதற்கான அங்கீகாரத்தையும் இப்பல்கலைக்கழகம் முறையாகப் பதிவு செய்துள்ளது.

இப்பல்கலைக்கழகத்தின் வேந்தராக, டாக்டர் தாழை இரா.உதயநேசனும், துணைவேந்தராக டாக்டர் ஆல்வினும், பதிவாளராக முனைவர் கோ.பாட்டழகனும் இயங்கிவருகின்றனர்.

ஆலோசனைக் குழுக்களாக, கவிஞர் கா.நா.கல்யாண சுந்தரம், கவிஞர் ஆரூர் தமிழ்நாடன், பாவலர் சரஸ்வதி பாஸ்கரன், எழுத்தாளர் சாம்பவி சங்கர் ஆகியோரும் நிர்வாகக் குழு இயக்குநர்களாக, முனைவர் ஜோ.சம்பத்குமார்,



முனைவர் ஏ.ஜான் இளவரசு முனைவர் ஞா. விஜயகுமாரி, டாக்டர் ஜெயராமன் பலராமன், முனைவர் இரா. செந்தில் குமார் ஆகியோர்களும் சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் எஸ். பூங்குழலி அவர்களும் அலுவலகச் செயலாளர்கள் எழுத்தாளர் எம். மேரிமுத்து, கவிஞர் ரேணுகா ஸ்டாலின் அவர்களும் உள்ளனர்.

அமெரிக்கா முத்தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துவக்க விழா மற்றும் முதல் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 18 பிப்ரவரி 2022 அன்று சென்னை சால்வேசன் அரங்கில் கோலாகலமாக நடக்க இருக்கிறது. இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக, தமிழ் உலகம் போற்றும் மாமனிதர்கள் பங்கேற்க உள்ளனர்.

இப்பல்கலைக்கழக துவக்க விழாவில் தமிழ்ப் படைப்பாளர்களையும் எழுத்தாளர்களையும் கௌரவப்படுத்தும் விதமாக–

தமிழ்ச் சூழலில் உலாவரும் மதிப்பிற்குரியவர்கள் தன்முனைக் கவிஞர் கா.நா.கல்யாண சுந்தரம், இனிய உதயம் ஆசிரியர் கவிஞர் ஆரூர் தமிழ்நாடன், ஓவியக் கவிஞர் அமுத பாரதி, பாவலர் சரஸ்வதி பாஸ்கரன், கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி ஆகியோர்களுக்கு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாக மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கிச் சிறப்பிக்க இருக்கிறது இப்பல்கலைக்கழகம்.

இதுபோன்ற உலக நாடுகளில் உள்ள தமிழ்ப் படைப்பாளர்களையும் எழுத்தாளர்களையும் நல்ல சிந்தனையாளர்களையும் ஊக்கிவிக்கும் விதாமாக வாழ்க தமிழ்! வெல்க தமிழ் சமுதாயம்! எனும் முழக்கத்தோடு இப்பல்கலைக்கழகச் செயல்பாடுகள் வகுத்துள்ளன. தமிழர்களின் கவனத்திற்கு இப்பல்கலைக்கழக நிறுவனம் இந்தியாவில் குறிப்பாக, தமிழகத்தில் திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூரில் எண் 10 முதல்தெரு ஸ்ரீராமபுரத்தில் செயல்பட்டு வருகிறது.

முனைவர் **சம்பத்**

# பண்பாடு மணக்கும் தமிழர் திருமணம்

திருமணம் என்பது மனிதனால் மனித சமுதாயத்தின் நலன் கருதிப் படைத்துக்கொள்ளப்பட்ட ஓர் ஒழுக்கமுறை ஆகும். திருமணமானது மனித சமுதாயத்தின் பொதுமையான ஒன்றாக இருப்பினும் மதம், இனம், பண்பாடு, மனப்பாங்கு ஆகியவற்றிற்குத்தக மாறுபடும் இயல்பினது. தமிழ்ச் சமூகம் பழமைச் சமூகம் மட்டுமல்ல அது உலகளாவிய பண்பாட்டுப் படிமலர்ச்சியின் அனைத்து படிநிலைகளையும் கொண்டது. அத்தகைய தமிழ்ப் பண்பாட்டின் திருமணமுறை தமிழரின் தனித்த பண்பாட்டினை உணர்த்தும் பல்வகைத் திணைகளையும் பல்வகைச் சமூக முறைகளையும் ஒரு நீண்ட நெடிய அறுபடாத தொடர்ச்சியோடு பெற்று வந்திருக்கிறது. இதனூடே மாற்றங்களும் நிகழ்ந்து வந்துள்ளன. இத்தகைய தமிழ்ப் பண்பாட்டின் முக்கிய அடையாளங்களுள் ஒன்று திருமணம். திருமணம்; என்னும் வினைமுறையே இல்லறத்தின் தொடக்கமாக அமைந்து குடும்ப வாழ்விற்கும் சமூக வாழ்விற்கும் வழியமைக்கிறது.

தமிழர் பண்பாட்டின் இன்றியமையாக் கூறாகத் திகழ்வது குடும்ப அமைப்பாகும். குடும்ப வாழ்வின் அடிப்படை திருமணம் நிலையில் அமைந்திருந்ததனைத் தொல்காப்பியமும் சங்கப் பாடல்களும் தெளிவுறுத்துகின்றன.

சங்க இலக்கியம் காட்டும் பழந்தமிழரின் வாழ்வு களவு மற்றும் கற்பு வாழ்வாகும். களவு வாழ்வில் நேர்ந்த பொய் வழு ஆகியவற்றால் கற்பு மணம் பலரின் முன்னிலையில் நிகழும் சடங்காக வலியுறுத்தப்பட்டது.

தமிழ்ச் சமூகம் தொன்மையும் தொடர்ச்சியும் கொண்டது. அது ஆகும். “திருமணம் என்பது ஓர் ஆடவனும் ஒரு பெண்ணும் இணைந்து வாழ்வதற்குச் சமுதாயத்தால் ஏற்படுத்தப்பட்ட வினைமுறையாகும். இவ்வினை காரணமாக மணமக்கள் சில மதிப்புகளையும் பல பொறுப்புகளையும் பெறுகின்றனர்.

பண்டைத் தமிழர்கள் திருமணத்தை ஓர் உயர்ந்த வாழ்வியல் நெறியாகக் கொண்டிருந்தனர். இதனைத் தொல்காப்பியமும்



சங்க இலக்கியங்களும் தெளிவுறுத்துகின்றன. திருமணம் என்பதைக் குறிக்க மன்றல், வரைதல், வரைவு, கரணம் முதலிய சொற்களைத் தொல்காப்பியமும் வதுவை, வதுவை நன்மணம், மன்றல், கடி, வரைவு மணம், பெண்கோள் ஒழுக்கம் போன்ற சொற்களைச் சங்க இலக்கியங்களும் பயன்படுத்தியுள்ளன.

ஓர் ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாக இல்லறம் நடத்த இசைந்து ஒன்றிணைவது திருமணம் ஆகும். களவும் கற்பு வாழ்வுமே அன்பின் ஐந்திணையில் போற்றப்பெறும் உயரிய வாழ்வியல் நெறியாகத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இதில் களவு என்பது ஒத்த தலைவனும் தலைவியும் மனமொத்து வாழும் காதல் வாழ்வாகும். இன்பம், பொருள், அறம் என்று சொல்லப்பட்ட அன்பின் ஐந்திணையில் ஆராயுமிடத்து மறையோரால் வரையறை செய்யப்பட்ட எண்வகை மணத்துள் கந்தருவ மணத்தை ஒத்தது களவு மணமாகும். கற்பு மணவாழ்விற்கு முன்பு சமுதாயத்தில் மேலோங்கிய நிலையில் களவு மணமே இருந்துள்ளது. அத்தகைய களவு வாழ்வில் நேர்ந்த பொய், வழு போன்ற காரணங்களால் கற்பு மணம் பலரின் முன்னிலையில் நிகழும் சடங்காக வலியுறுத்தப்பட்டது என்பதனை,

“பொய்யும் வழுவும்
தோன்றிய பின்னர் ஐயர்
யாத்தனர் கரணம் என்ப”
(தொல்.,பொருள்.,கற்.,நூ.143)

என்று தொல்காப்பியர் தெளிவுறுத்துகிறார். தொல்காப்பியத்தின் வாயிலாகக் களவு வெளிப்பட்ட பின் வரைதல், களவு வெளிப்படும் முன் வரைதல் என்ற இரு வழிகளில் திருமணம் நடந்தேறியது என்பதனை,

“வெளிப்பட வரைதல் படாமை
வரைதல் என்று ஆயிரண்டு என்ப
வரைதல் ஆறே”

என்ற தொல்காப்பிய நூற்பாவினால் அறிய இயலுகிறது. தலைவன் தலைவியின் களவு வாழ்க்கை கற்பு மணமாக மாறுவதற்குத் தோழியின் அறத்தொடு நிற்றல் முக்கிய காரணமாக இருந்துள்ளது. களவு இல்லாமலும் கற்பு வாழ்க்கை அமையப்பெறும். இவ்வாறு திருமணத்தைத் தொடக்கமாகக் கொண்டு அமையப்பெறும் வாழ்க்கை கற்பு வாழ்க்கை எனப்படுகிறது.

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக் கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக் கொளற்க்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே" (தொல்.,பொருள்.,கற்.,நூ.140)

எனக் கற்பின் இலக்கணம் கூறும் தொல்காப்பிய வரிகளின்வழித் திருமணமானது சடங்கொடு பொருந்தியதாகக் கொள்ளுதற்குரிய மரபினையுடைய தலைவனுக்குக் கொடுத்தற்குரிய மரபினையுடைய தலைவியைத் தமர் மணம் செய்துகொடுப்ப மணந்து கொள்ளுதல் என்பது புலப்படுகிறது. தலைவி தலைவனுடன் உடன்போக்கு சென்றவிடத்துத் தமர் மணம் செய்து கொடுக்காமலே திருமணம் நடந்தேறியுள்ளது. மணமான பின்னர் தமர் ஏற்றுக்கொள்ளும் சூழலும் அமைவதுண்டு. முண்டக மலர் அரிதினில் பறிக்கப்படாமல் காற்றினால் உதிர்ந்து எளிதில் கொள்ளுமாறு மணற்பரப்பில் பரந்திருந்தன. அதுபோல தாயும் தந்தையும் எளிதில் உடன்பட்டுத் தலைவி விரும்பிய தலைவனை மணமுடித்த நிகழ்வினை,

"கூன் முன் முண்டகக் கூர்ம்பனி மாமலர் நூலறு முத்தின் காலொடு பாறித் துறைதொறும் பரக்கும் தூமணற் சேர்ப்பனை யானும் காதலென்;: யாயும் நனி வெய்யள்: எந்தையும் கொடீஇயர் வேண்டும் அம்பல் ஊரும் அவனொடு மொழிமே" என்ற குறுந்தொகைப் பாடல் புலப்படுத்தியுள்ளது.

சங்க காலத் திருமண நிகழ்வில் மணம் செய்துவைக்கும் ஆரவாரமுடைய முதிய மங்கல மகளிர் தலையில் நிறைநீர் குடத்தினைச் சுமந்தவராய்க் கைகளில் புதிய அகன்ற மண்டை என்னும் கலத்தினை ஏந்தியவராய் ஒன்றுகூடி முன்னே தருவனவற்றையும் பின்னே தருவனற்றையும் முறைமுறையாக எடுத்துத் தந்தவண்ணம் இருந்தனர். பின்னர் தூய அணிகலன்கள் அணிந்த மகன்களைப் பெற்றெடுத்த மகளிர் நால்வர் கூடி நின்று "கற்பினின்றும் வழுவாது நல்ல பலவற்றினும் உதவியாக இருந்து, நின்னை மனைவியாகப் பெற்ற நின் கணவனைப் பேணிக்காக்கும் பெருவிருப்பத்தை உடையை ஆகுக", என வாழ்த்தி நீரொடு குளிர்ந்த இதழ்களையுடைய மலர்களை நெல்லுடன் கலந்து மணமக்களின் தலையில் தூவி வாழ்த்தியுள்ளனர் என்பதை,

"புதல்வற் பயந்த திதலை அவ் வயிற்று வால் இழை மகளிர் நால்வர் கூடி,கற்பினின் வழாஅ நற் பல உதவிப் பெற்றோர் பெட்டு;ம் பிணையை ஆக! என நீரொடு சொரிந்த ஈர்இதழ் அலரி பல்இருங் கதுப்பின் நெல்லொடு தயங்க வதுவை நல் மணம்..."

என்ற சங்க வரிகள் காட்சிப்படுத்தியுள்ளன. இப்பாடலின் வழிச் சங்ககாலத் திருமணம் எவ்வாறு நடந்தேறியது என்பதையும், அதில் பெண்களின் பங்கு எத்தகையது என்பதையும் அறியமுடிகிறது. இது தொல்காப்பியர் குறிப்பிடும்

கற்பு மணத்திற்குச் சான்றாக அமைந்துள்ளது.

மேலும் அன்று நிலவிய திருமண முறையில் பெண்ணின் தந்தை மகளின் கையைப் பற்றித் தலைவனிடம் ஒப்படைத்த நிகழ்வு சிறப்புற்றிருந்ததை,

"நேரிறை முன்கை பற்றி நுமர்தர நாடறி நல்மணம் அயர்கம்: சின்னாள் கலங்கல் ஓம்புமின் இலங்கு இழையீரென"

எனக் குறிஞ்சிப்பாட்டு விளக்கியுள்ளது. இதன் வழி திருமணத்தில் இன்று காணப்படுவது போல் வேள்வி வளர்த்துத் தாலி கட்டும் பழக்கம் இல்லை என்பது புலப்படுகிறது. இவற்றின் வழி பழந்தமிழரின் திருமண நிகழ்வினை அறிய முடிகிறது.

பழந்தமிழர் காலம்தொட்டு இன்றுவரை மணமகன் வீட்டார் பெண்வீட்டாரிடம் பெண் கேட்டுத் திருமணத்தை நிச்சயிக்கும் பழக்கம் காணலாகிறது. பெண் கேட்பதற்கு நல்லநாள் பார்த்துப் பெரியவர்களையும் அறிவர்களையும் அழைத்து வந்துள்ளனர் என்பதனை,

"அம்மவாழி தோழி– நம்ஊர்ப் பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோர் தண்டுடைக் கையர், வெண்தலைச் சிதவலர், நன்று நன்று என்னும் மாக்களோடு இன்று பெரிது என்னும் ஆங்கணது அவையே"

என்ற குறுந்தொகைப் பாடல்வழி அறியமுடிகிறது.

விருந்தோம்பல் என்பது தமிழரின் தலையாயப் பண்புகளுள் ஒன்றாகும்.





பழந்தமிழர் திருமணத்தின் போது பெருந்திரளான விருந்தினருக்கு உழுத்தம்பருப்புடன் கூட்டி சமைத்த குழைந்த பொங்கல் மற்றும் இறைச்சியுடன் சேர்த்துச் செய்யபட்ட நெய்கலந்த வெண்சோறு போன்ற உணவினை வள்ளன்மையோடு விருந்தோம்பல் செய்ததை,

"உழுந்து தலைப்பெய்த கொழுங் களி மிதவை பெருஞ் சோற்று அமலை நிற்ப" (அகநானூறு,86:1–2)

"மைப்புஅறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு வரையா வண்மையோடு புரையோர்ப் பேணி" (அகநானூறு,136:1–2) என்ற பாடல்கள் காட்சிப் படுத்துகின்றன.

ஓர் ஆணும் பெண்ணும் உள்ளத்தாலும் உடலாலும் இரண்டறக் கலந்து உலக இன்ப நெறியோடு வாழும் இல்லறம் அறம் வளர்க்கும் களமாகும். இயல்பாக மனம் ஒன்றி இணைந்த வாழ்க்கைமுறை ஒரு சில சமூகக் காரணிகளுக்காக பலர் அறியும்வண்ணம் சில நிகழ்ச்சிகளோடு அரங்கேறியது. திருமண வினைகளைச் செய்வதற்கு நல்லநாள் மற்றும் நல்லநேரம் பார்க்கும் முறை இருந்துள்ளது. பழந்தமிழரிடமிருந்து இன்றைய நடைமுறை வரை மணமகன் வீட்டார் பெண்ணின் வீட்டிற்குப் பெரியவர்களுடன் சென்று பெண் கேட்கும் நிகழ்வும், பெண்ணிற்கு மணமகன் வீட்டார் பரிசம் போடும் வழக்கமும் காணலாகிறது. பழந்தமிழரின் திருமணத்தில் ஊரும் உறவும் கூடி மணமகளை மணமகனின் கையில் கொடுத்து வாழ்த்துவதே திருமண நிகழ்வாக இருந்துள்ளது. இன்றைய திருமணத்தில் காணப்படுவது போல் வேள்வி வளர்த்துத் தாலி கட்டும் பழக்கம் இல்லை என்பது தெளிவாகிறது.

*ம. நந்தினி*

# மணமக்கள் பல்லாண்டு வாழ்க!

எத்துறை யாயினும் என் போல் இனிய
முத்தமிழ் ஆளும் மருத்துவர்
ஆம்பூரில் அரிதாரம் இட்ட
செவ்விதழ் சேர்ந்த செங்காந்தள் மலர்கள்

உதய நேசன் கலையரசி இருவரின்
கன்னல் தமிழால் காதல் மொழியால்
கனிந்திட்ட கற்கண்டாய்
இன்ப ஊற்றில் ஊற்றெடுத்த
அன்பு புதல்வன் திருநிறைச்செல்வன்
சாம் ஜெயராஜ்

அகில உலகில் மாசில்லாப் புகழ்பெற்று
பன்முகத் திறமை கொண்ட
மருத்துவராய் சேவை உள்ளத்தோடு
செம்மாந்தர் பண் போடும்
மனிதநேய மாணிக்கம் இன்று
மணவிழாக் காண வீற்றிருக்கிறார்

மணவிழாவில் மணமகளின் வரவை
எதிர்நோக்கும் வரன்
திருநிறைச்செல்வி பிரேமலதாவை
இரு கரம் சேர்த்து
ஈருயிரை ஓருயிராய்
உள்ளம் கொண்டாட
இன்ப வெள்ளத்தில் திகைத்து
நவில் தோறும் புகழாரம் சூட்டி
பேச்சில் முக்கனி சுவை ததும்ப
பூவுலகில்
பல்லாண்டு பல்லாண்டு காலம் வாழ
வாழ்த்துகிறேன்..



முனைவர் **விஜயகுமாரி கார்த்திகேயன்**
சென்னை

# மணித்தமிழின் மகனே!

அன்புமிகும் சாம்!
அமுதின் துளியே !
தமிழின் தம்பி !

மணித் தமிழின்
மகனாக வந்துதித்த
கனித்தமிழே !



சொல்லமுதே
சுடர் கவியே
சுந்தரத்தமிழே
சூரியனே !

மாண்பு மிகுந்த
பெண்குலத் திலகம்
பெருமைக்குரிய இளவரசி
பிரேமலதாவை
மணம் முடித்துக் கைபிடித்தீர்!

உங்கள்
இல்லவற உலகம்
நல்லற உலகமாய்
உயர்ந்து தமிழைத்து
உலகுக்கே வழிகாட்டட்டும்!
கூடுதலாய்
தமிழின்ப ஒளி காட்டட்டும்!

உயிருக்கு உயிரான
வாழ்க்கைத் துணையுடன்
தமிழ்போல் வாழ்ந்திரு தம்பி !
நெஞ்சம் நிறைந்த
வாழ்த்துகள் !

– கவிஞர் செ. வீரமணி

# உயிரில் உதிரும்

ஒருயிரென ஒன்றுபட்டு
ஈரடித் திருக்குறள் போலும்
இணைந்து வாழ்ந்து
நான்கடி நாலடியாராய்
நயம்பட உயர்ந்து
ஐந்திணைச் சிறப்புகளை
அழகாய்ப் பெற்று
அறுபொழுது காலங்களிலும்
அகத்திணைக் காதல் பெருகி
ஏழுலகத் தேவர்களின்
உயரிய ஆசிகளோடு
எட்டுத் திக்குகளிலிருந்தும்
வளமெலாம் பெருகிவர
நவரச உணர்வுகளும்
நயமுடன் ஏற்று
நலத்துடனும் வளத்துடன்
வாழ்வு பொங்கட்டும்...

பல்லாண்டு பல்லாண்டு
பல்லாயிரத்தாண்டு
மணமக்கள் நீவிர்
வாழ்க வாழ்கவே...



–கவிஞர் கனகா பாலன்

# வளமெலாம் பெருகிவர...

# வாழ்த்து மலர்கள்!

–கவிஞர் **சிவமணி**



**மா** என்றால் பெரிய என்று அர்த்தமாம்
மாப்பிள்ளையாய் ஒரு மகன்

மரு என்றால் கலைமகள்,
மணம் என்று அர்த்தமாம்
மறு பிறப்பாய் ஒரு மகள்

மலர்களின் சிரிப்பால்
மங்கள சப்தத்தால்
மணந்து நிற்குது மேடை
சிரிப்புக்கு ஏது சோடை

நதி போல சேர்ந்த சொந்தம்
நாளும் தந்திடும் பந்தம்
ஆசியில் நீங்களும் நிறைய
ஆனந்த வெள்ளத்தில் நனைய

விடியலாய் இருந்து பார்
நோக்கம் உணர்ந்து பார்
இயற்கையை ரசித்து பார்
வாழ்வும் சிறக்கும் பார்

நட்பாய் பழகிட இனிக்கும்
நல்வாழ்வும் புரிந்திட சுவைக்கும்
நாராய் இருந்தால் மணக்கும்
நற்பேச்சும் நன்மையை விதைக்கும்

விட்டு தருவதும் சுகம்
விளக்காய் எரிவதும் வரம்
வீண்பேச்சை துறப்பது நலம்
விளைச்சலில் செழிக்கும் குலம்


சந்தோச சாரலை நீங்களும்
சேர்ந்தே தூரனும் நாளும்
பாலமாய் இருக்கனும் அன்பும்
பாந்தமாய் இருக்கனும் பண்பும்

நீரின்றி அமையாது உலகு
நீங்களின்றி நிறையாது வாழ்வு
சமுத்திரமாய் இருந்திட உறவு
சாதித்து மிதப்பதே வரவு

நிறைந்த மனமே மருந்து
நீங்காத கரமே கரும்பு
நிம்மதி உணர்வை விரும்பு
நித்தமும் பேரன்பில் அரும்பு
வாழ்க வளமுடன்...

**திருமண பந்தத்தில் இணையும்**
**சாம் உதயராஜ் - பிரேமலதா**
**ஆகியோருக்கு வாழ்த்து மடல்!**

## இல்லறம் செழிக்க வாழ்த்துக்கள்..



கவிஞர் ஆத்தூரர் சாகுல்

இறையருள் பெற்று இன்புற்று வாழ
இதயங்கனிந்த வாழ்த்துகள்..!
அகத்திலும் புறத்திலும் நற் செயல் புரிந்து
இறையருள் பெற்றிட வாழ்த்துகள்!

அறச்செயல்களில் அகம் மகிழ்ந்து
இல்லறம் செழிக்க வாழ்த்துகள்!
அன்பும் புரிதலும் மிகைத்து வாழ்வில்
இன்புற்று வாழ வாழ்த்துகள் !

ஒருவருக்கொருவர் ஆடையாய் இருந்து
குறையின்றி வாழ வாழ்த்துகள்!
தீர்க்க தரிசிசிகளின் வாழ்க்கையின் சுவட்டில்
சீர்மைமிகு இல்லறம் காண
இதயப் பூர்வ வாழ்த்துகள்!

திருநிறைச் செல்வன் ஜெபராஜ் அவர்களும்
திருநிறைச் செல்வி பிரேமலதா அவர்களும்
இல்லற வாழ்வில் முன்னுதாரணமாய் வாழ
இதயத்திலிருந்து வாழ்த்துகள்!

## வானம் இரட்டிப்பாகும்



நாடன் சூர்யா

முத்தமிழ் நேசனாம்
உதய நேசனின்
அன்பின் விதைகளே..

காதலை ஊற்றி
வேர்களை உறுதிப்படுத்துங்கள்
நேசத்தின் கனிகள்
உங்கள் தோட்டமெங்கும்
பூக்கட்டும்

காதலின் கனிகள்
உங்கள் கிளைகளெங்கும்
காய்க்கட்டும்

இரு பறவைகள் கைகோத்துவிட்டன
இனி காதல் வானம் இரட்டிப்பாகும்

சேர்ந்தே வானம் உலவுங்கள்
உயரம் பருகுங்கள்

தமிழ் போல் வாழ்க
தமிழ் போல் வளர்க

இல்லறம் இனிக்கட்டும்.

எழுத்தாளர் கா.கமலக்கண்ணன்



வெற்றிக்கு

வாழ்த்துக்கள்

## சாம் உதயராஜ்

சா தனைகள் பல படைக்க போகு
ம் சரித்திர நாயகனே
உ யர்வான எண்ணங்களால்
த லைசிறந்தவனே
ய முனை நதியும் நீருமாய்
ரா கமும் தாளமுமாய் லைலா
ம ஜ் னுவாய் காதலில் சிறகடித்து
பி றந்த, புகுந்த வீடுகளை
ரே ழியாய் இணைத்து
ம னதால் அணைத்து
ல ட்சியங்கள் பலவற்றை
தா ரகையாய் இருவரும் ஒளிர்ந்திட
வாழ்த்துக்கள்..

“விட்டுக் கொடுப்பவர் கெட்டுப் போவதில்லை” என்று பழமொழி உண்டு.

தேங்காய் சட்னி அரைப்பது கஷ்டம். ஏனெனில், தேங்காய் இலகுவாக அரைக்கமுடியாது. தன்னை விட்டுக்கொடுக்காது.

ஆனால் தக்காளி சட்னி தயார் செய்வது சுலபம். தக்காளி நமக்கு விட்டுக்கொடுத்து விடும்.

விட்டுக்கொடுக்கும் தக்காளி சட்னி சீக்கிரம் கெட்டுப்போகாது. விட்டுக் கொடுக்காத தேங்காய் சட்னி சீக்கிரம் கெட்டு விடும்.

கணவன் மனைவி கூட விட்டுக் கொடுத்து வாழ்ந்தால் தான் வாழ்க்கை ருசிக்கும். விட்டுக்கொடுப்பதால், நமது சுய கௌரவம் பறி போய்விடும் என்று நினைப்பது தவறானது. மாறாக நம் மதிப்பு மேம்படும்.

விட்டுக் கொடுத்து போவது என்பது கணவன் மனைவிக்காவும் மனைவி கணவனுக்காவும் செய்யும் பொழுது அன்பும் காதலும் அதிகரிக்கும் என்பது உண்மை.

அன்பும் காதலும் அதிகரித்தால் உழைப்பும் துணிவும் அதிகரிக்கும். அதனால் வாய்ப்புகள் அதிரிக்கும. அதனால் வெற்றிகள் பலவும் கிடைக்கும். அதனால் பணம் மட்டுமல்ல மனங்களும் உங்களை தேடி வரும்...

நீங்கள் நன்றாக இருக்கிறீர்கள் என்றால் உதயநேசன் பெருமிதத்தால் உயர்வார். கலையரசி பெருமையால் அரசி ஆவார்.

நீங்கள் இருவரும் இணைந்து வெற்றி பல பெற்று, பெற்றவர்களையும் மற்றவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்திட வாழ்த்துக்களும்... ஆசிகளும்...

# எப்போதும் எரியட்டும் காதல் விளக்கு!

புதுமணக் குயில்களாம்
அன்புமிகும் சாம்
இனிமைமிகும் பிரேமி!

நீங்கள்
பெருந்தமிழர்
உயர நேசனான உதய நேசரின்
குடும்பத்துத் செல்வங்கள்!
உங்கள் உலகம்
இன்பத்திலேயே
என்றென்றும் உருளட்டும்!

சூரியக் கதிர்களைப் போல்
பிரபஞ்சமெங்கும்
வெடிக்கட்டும்
உங்கள் எல்லையில்லா அன்பு!

தித்திக்கும் கரும்பாய்
எப்போதும் இனிக்கட்டும்
உங்கள் வாய்ச் சொற்கள்!

கடலின் அலைகள்
பாதங்களை முத்தமிடுவதைப் போல
காத்திருந்து காத்திருந்து
இதயங்கள் தழுவிக்கொண்டே
இன்பமாய்
வாழ்க்கை அமையட்டும்!

அணையா விளக்காய்
உங்கள் கண்களில்
எப்போதும் எரியட்டும்
காதல் விளக்கு!

சுவைத்து சுவைத்து
சுவை தெளியா அமுதாய்
உங்கள் இரவுகள் இருக்கட்டும்!

காந்தங்கள் தோற்றுப் போகட்டும்
உங்கள் அன்பின் அணைப்பில்!

மக்களின் இதயத்தில்
மங்காத சுடர் விளக்காய்
மனமொன்றி வாழ்ந்திட
வாழ்த்துகிறேன்!
இன்பத் தமிழ் போல்
இனிமையாய்
இளமையாய்
வாழ்க தம்பதியர்!



கவிஞர் ரேகா


இனிப்பு வீதியில்
இல்லறப் பயணம்



அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக் கழக வேந்தர்
பெருந்தமிழர் இரா.உதயநேசனின்
அருந்தமிழ்ப் பணிகளையும் – பல்கலைக் கழகப்
முன்னெடுப்புகளையும் கை கூப்பி வாழ்த்துகிறோம்!

– அமெரிக்கா முத்தமிழ் இலக்கியப் பேரவை